25th July 1964

மேற்படி திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவு—ரூ. 1.07 லட்சம்.

(iv) பிரதி டன் கூடுதல் உணவு உற்பத்திக்கு ஆகும் செலவு விதம்—ரூ. 3,057.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : இந்தத் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டதா? அப்படி என்றால் எப்பொழுது அமுலாக்கப் படும் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ள அரசாங்கம் முன்வந்திருக்கிறது. இருந்தாலும் காட்டிலாகாவி லிருந்து 14 ஏக்கர் நிலம் ஏரி உண்டுபண்ணுவதற்கும், மற்ற வேலைகளுக்கும், தேவைப்படுகிறது. கான்சர்வேட்டர் ஆஃப் பாரஸ்ட்ஸ் இடமிருந்து இன்னும் பதில் வரவில்லை. அந்த பிறகு ஒரு முடிவுக்கு வரமுடியும்.

*713 கேள்வி.—**திரு. சி. ம. அம்பிகாபதி :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

தலைஞாயிறு கிராமத்தில் ஓடும் நல்லாற்றைப் பிரித்து வெட்டி, வேதாரண்யம் கால்வாயில் நீரை வடியவிடும் திட்டம் ஏதேனும் உண்டா?

கனம் திரு. பூ. கக்கன் : இல்லை, ஐயா.

குறைந்தபட்ச சம்பளச் சட்டம்

*714 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குறைந்த பட்ச சம்பளச் சட்டத்தின் தற்போதைய நடைமுறையைப் பரிசீலிக்க மத்திய சர்க்கார் மாநில சர்க்காரைக் கேட்டுக்கொண்டதா?

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரம் ஒன்று சபைமுன் வைக்கப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை

குடிநீர்த் திட்டம் (கோவில்பட்டி தாலுகா)

*715 கேள்வி.—**திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லாவில் கோவில்பட்டி தாலூகாவில் குடிதண்ணீர் கஷ்டத்தைப் போக்குவதற்கு 1962-63-ம் ஆண்டில் என்னென்ன திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன?